# கஹவத்த பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 20 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுன் 29 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கஹவத்த பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கஹவத்த பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நான்கு கணக்கீட்டு விடயங்களது பேரேட்டுக் கணக்கின் பிரகாரமான மீதிக்கும் உப பதிவேட்டின் பிரகாரமான மீதிக்கும் இடையேயான ரூபா 3,425,391 வித்தியாசத்திற்கான காரணத்தை அறிந்து பேரேட்டுக் கணக்கை சீராக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 48,760,070 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,545,796 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,157,354 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,777 | 3,137 | 2,760 |
| (ii) | குத்தகை வாடகை | 2,931 | 2,917 | 731 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 727 | 702 | - |
| (iii) | பிற வருவாய் | - | 8,440 | - |

### 2.2.2 தீர்வையும் வரியும்

தீர்வை, வரி என்பவற்றினது 1326 கூறுகளில் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 2,537,889 ஆகும். அம் மீதியில் ரூபா 5,000 நிலுவை மீதியிலும் கூடிய 111 கூறுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,479,798 ஆகும். இந்த 111 கூறுகளினதும் நிலுவைக்காலம் காலாண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரையிலானவை.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபை இறைச்சி, மீன் கடைகளையும் வராந்தச் சந்தைகளையும் குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருதே நிலவி வரும் ரூபா 474,316 மீதியை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,513,166 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,339,510 |

**2.3 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கஹவத்த வாரச் சந்தையினது 2008 ஆம் ஆண்டிற்கான அறவிடப்பட முடியாத கடை வாடகையான ரூபா 74,615 பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட வேண்டுமென 2012 ஒக்டோபர் 30 ஆந் திகதிய பேரவைக் கூட்டம் திர்மானித்தது. இதற்கான அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னரே இம் மீதி பதிவேடுகளில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) கொள்வனவு நடைமுறைகளுக்கு அப்பால் தலைமை அலுவலகத்திற்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2012 மார்ச் 30 அன்று ரூபா 222.365 தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஜனவரி 10 ஆந் திகதி நடை பெற்ற சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டிக்காக ரூபா 33,430 செலவழிக்கப்பட்டிருந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் இதன் பொருட்டு அமைச்சின் முன் கூட்டிய அங்கீகாரம் பெறப்படவில்லை.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2010, 2011 ஆம் ஆண்டுகளின் பொருட்டான 11 கடன் கொடுத்தோர் மீதியாகிய ரூபா 1,361,093 மீளாய்வாண்டு முடிவிலும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்பு மீதியாகக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 1,741,782 தொடர்ந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து வருவதாகும். எனினும், அவற்றை இனங் காண்பதற்கு பட்டோலையோ அல்லது வேறெந்த சான்றுகளுமோ சபையிடம் இருக்கவில்லை.

(இ) கொழும்பு, எம்பிலிபிட்டிய பிரதான பாதையில் மாதம்பே முச்சந்தியின் இரு மருங்கிலும் அநேக ஆண்டுகளாக நாளாந்தம் நடைபெறும் மொத்த மீன் விற்பனைச் சந்தை தொடர்பாக முறையான நிர்வாகமோ அல்லது அனுமதிப்பத்திர வழங்கலோ நடைபெறவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது ரூபா 13,821,400 பெறுமதியான 42 வேலைகள் மதிப்பிடப்பட்ட போதும் ரூபா 1,975,000 க்கான 6 வேலைகள் மாத்திரமே நடைபெற்றிருந்தன.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு